முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் குகைநமச்சிவாயர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

12.03.2019, செவ்வாய்க்கிழமை

1. **ஏழாம் படை வீட்டு மகா சக்தியே**
**எளியோர்க்கும் அழியாமை தந்தருளி**
**வாழ வைக்கும் வள்ளலே ஞானியே**
**வடிவேலன் அவதார தவசியே**

2. தவசியே உன் பெருமை பாடிட
தரணியே ஞானயுகமாகும் எனக் கூறி
அவணியிலே **விளம்பி சால் திங்கள்**
**அறிவிக்க எழுநான்கு திகதி குசன் வாரம்**
**(விளம்பி வருடம் மாசி மாதம் 28ம் நாள் 12.03.2019, செவ்வாய்க்கிழமை)**

3. வாரமதில் நித்ய பிரசன்ன ஆசியை
வழங்குவேன் குகைநமச்சிவாயர் யானும்
சோரம் போகா மக்கள் படையை
சுத்தநெறி கொண்டு ஞானபடையாக

4. ஆகவே உருவாக்கம் செய்து
அறம் வளர்க்கும் அரங்க ஞானியே
யுகமாற்றம் செய்ய வந்த குரு
உயர்வாக அரங்கன் தலைமை

5. தலைமை ஏற்று வருதலுற
தருமம் செய்தும் வருதலுற
பிழை நேரா ஞானக் கூட்டமாகி
பிசகில்லா ஞான ஆட்சி உருவாகும்

6. ஆகவே ஞானிகள் இணைவை
ஆக்க சக்தியாகக் கொண்டு
வகைபட வழிநடத்தும் குரு
வரம் பெற்றுவந்த ஞான குரு

7. குருவரங்கன் சொல் செயல்களே
குவலயத்தில் சட்டமாக்கப்படவிருக்க
முருகா அரங்கா என வேண்டி
முழு சரணடைவு கொண்டுவர

8. வருகவே வையகம் எங்கும்
வளமான சூழல் உருவாகும்
முருகப்பெருமான் தயவு பெருகி
முழுமையான பாதுகாப்பு பெருகும்

9. பெருகவே ஞானம் அருளி
பிரச்சனைகள் அணுகா காத்து
தருமம் செய்விக்க தூண்டும்
தவசி வழியே மாசிறந்த வழி

10. வழிமொழிய வணங்கி வருக
வழிநடந்து தெளிவு பெற்று
அழியாமை ஒன்றே நோக்கமாக
அரங்கனடி தொழும் மக்களுக்கு

11. மக்களுக்கு மறுமை பயமில்லை
மக்களுக்கு மரண பயமில்லை
தேக்கமின்றி வர பிறவி நிலை இல்லை
தெரிவித்த நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் குகைநமச்சிவாயர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

ஏழாம் படை வீடாம் துறையூர் ஓங்காரக்குடிலினை சர்வ வல்லமையுள்ள உலக மாற்றம் கருதி படைத்திட்ட மகா சக்தியே எளியோர்க்கும் அருள் செய்து அழிவிலாமை ஞானம் தந்தருளி வாழ வைக்கின்ற வள்ளலே வள்ளல் ஞானியே வடிவேலனாம் முருகப்பெருமானின் அவதார மகாதவசியே அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகினில் சொல்ல சொல்ல இவ்வுலகமே உமது பெருமை கேட்ட பயனால் ஞானயுகமாக மாறிடும் எனக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மாசி மாதம் 28ம் நாள் 12.03.2019, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே குகைநமச்சிவாயர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் குகைநமச்சிவாயர்.

குற்றமற்ற வீண்போகாத மக்கள் படையினை அரங்கர் வகுத்திட்ட சுத்தநெறியைக் கொண்டு ஞானப்படையாக உருவாக்கி உலகமெலாம் தானதருமங்களை பெருக்கி அறம் வளர்க்கின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனே இவ்வுலகினில் யுகமாற்றம்தனை செய்ய வந்துதித்திட்ட மகா ஞான குரு ஆவார்.

உயர் ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தலைமையை உலக மக்கள் எல்லாம் ஏற்று பின்தொடர அரங்கமகானை பின் தொடர்ந்தோர் எல்லாம் பிழையற்ற குற்றமற்ற ஞானக்கூட்டமாக மாறி இவ்வுலகினில் தர்மத்தை நிலை நாட்டி தவறில்லா தூய ஞானஆட்சியை உருவாக்குவார்கள்.

ஆதலினால் ஞானிகள் இணைந்து உருவாக்கிய ஞானசக்தியை ஆக்க சக்தியாகக் கொண்டு உலகினை முறையோடு வழிநடத்துகின்ற மகா ஞானகுரு யுகமாற்றம் செய்திடவே உலகின் ஞான வர்க்கத்தினர் அனைவரிடத்தும் வரம் பெற்று முருகப்பெருமானே தம்முள் தாங்கி முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட ஞானகுரு ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சொல்லும் செயலும் இனி வருங்காலங்களில் சட்டங்களாக ஆக்கப்படும், அரங்கனின் சொற்களும் செயல்களும் மக்களுக்கு ஏற்ற நெறியாக இனி உலகமெங்கும் பின்பற்றப்படும்.

முருகா, முருகா, முருகா, அரங்கா, அரங்கா, அரங்கா என்றே முருகனும் அரங்கனும் ஒன்றேயெனும் சிந்தை மாறாது மனம் உருகி வேண்டி அரங்கனே கதியென முழுச்சரணாகதியினை அடைந்துவிட உலகமெங்கும் இயற்கையும் மகிழ்ந்து மக்களுக்கு நன்மைகளே செய்யும். அதனால் உலகமே இயற்கை வளம் கொழிக்கும் உலகமாக ஆகிடும். முருகப்பெருமானின் தயவும் உலகினில் பெருகி முழுமையான அருள் பாதுகாப்புமிக்க உலகமாக இவ்வுலகம் மாறிடும்.

உலகோர்க்கும் ஞானம் வழங்கி அருள் செய்து மக்களின் பிரச்சனைகளை களைந்து பிரச்சனைகள் அணுகாது காத்து தருமங்களை செய்திட மக்களை தூண்டுகின்ற மகா தவசி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறும் உண்மை ஞானமார்க்கமே இவ்வுலகம் இதுவரை கண்ட மார்க்கங்களிலேயே மிகப்பெரும் உண்மை மார்க்கமாகும். அதுவே மிகச்சிறந்த வழியுமாகும்.

அரங்கனின் உண்மை ஞான மார்க்கத்தை மனம் விரும்பி ஏற்று அரங்கனையும், ஞானிகளையும் முருகப்பெருமானையும் உளமார வணங்கிவர, அரங்கனின் வழி நடந்து வர, அவரவரின் அறிவும் தெளிவு பெற்று அழிவிலாமை ஞானம் அடைவதே தலையாய நோக்கமாக கொண்டு அரங்கமகாதேசிகனார் திருவடியே கதியென சரணடைந்து பூஜிக்கும் மக்களுக்கு மறுமை எனும் மறுபிறவிப் பயம் ஏதும் இல்லை. அவர்களுக்கு மரணபயமும் இல்லை, மறுபிறப்பு பயமும் இல்லை, தடையின்றி அரங்கனை பின்பற்றி நடந்து வர, அவர்களுக்கு பிறவி என்பதே இல்லையப்பா என தமது நித்ய பிரசன்ன ஆசி நூல் மூலம் பிறவியறுக்கும் உபாயம் உரைக்கின்றார் மகான் குகைநமச்சிவாயர்.

–சுபம்–